**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 49/2021**

2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய பௌஜாகனி **PW.1** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 24.10.2024

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | பௌஜாகனி | | |
| Husband Name | : | தாஜிதீன் | Court | : |
| Village | : | முடிதிருச்சம்பள்ளி | Taluk | : |
| Calling | : | | Religion | : |
| Age | : | 50 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

20.03.2014 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து எனது பெயரில் ஏற்பட்ட கிரய சாசனத்தின் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 01.01.1975 முதல் 28.06.2021 வரையிலான வில்லங்க சான்றிதழின் கணினி வழி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.